## சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் – கல்வி – விடுதிகள் 2011–2012–ஆம் ஆண்டு – பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ/மாணவியருக்கு 25 கல்லூரி விடுதிகளும், சிறுபான்மையினர் பிரிவில் இஸ்லாமிய மாணவியருக்கென 3 பள்ளி விடுதிகளும் ஆக மொத்தம் 28 புதிய விடுதிகள் துவங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (பிந1 (2))துறை

அரசாணை (நிலை) எண். 28 நாள்: 16.3.2012

படிக்கப்பட்டது :

1. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கடித எண். பி4/2885/2011, நாள். 16.9.2011.
2. சிறுபான்மையினர் நல ஆணையரின் கடிதம் ந.க.எண். டிஎம்.1/5558/2011, நாள். 23.9.2011.

– – – – –

ஆணை:

தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் இஸ்லாமிய சிறுபான்மையின மாணவ/மாணவியரின் நலனுக்காக மொத்தம் 1238 விடுதிகள் இயங்கி வருகின்றன. 2011–12–ஆம் ஆண்டில் இத்துறையின் மானியக் கோரிக்கை அறிவிப்பில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவ/மாணவியருக்கு புதிதாக 25 கல்லூரி விடுதிகளும், சிறுபான்மையினர் பிரிவில் இஸ்லாமிய மாணவியருக்கு 3 பள்ளி விடுதிகளும் ஆக மொத்தம் 28 விடுதிகள் துவங்க வெளியிடப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில் 28 புதிய விடுதிகளை துவங்கக் கோரி மேலே படிக்கப்பட்ட கடிதங்களில் பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் மற்றும் சிறுபான்மையினர் நல ஆணையர் ஆகியோர் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளனர்.

2. மேற்கூறிய கருத்துரு அரசால் நன்கு பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்ட ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

(i) 2011–2012–ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன வகுப்பு மாணவ / மாணவியருக்கு 25 கல்லூரி விடுதிகளும், சிறுபான்மையினர் பிரிவில் இஸ்லாமிய மாணவியருக்கென 3 பள்ளி விடுதிகளும் ஆக மொத்தம் 28 புதிய விடுதிகளை இணைப்பில் கண்டுள்ளவாறு துவங்கிட அரசு ஆணையிடுகிறது.

(ii) 2011–2012–ஆம் ஆண்டு துவங்கப்படும் 28 புதிய விடுதிகளில், 25 கல்லூரி விடுதிகளாகவும், 3 இஸ்லாமிய பள்ளி மாணவியர் விடுதிகளாகவும் இயங்கும். 25 கல்லூரி விடுதிகளில் 9 விடுதிகள் பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி விடுதிகளாகவும், 16 விடுதிகள் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி விடுதிகளாகவும் இயங்கும்.

(iii) இந்த 28 புதிய விடுதிகளையும் மார்ச் 2012 முதல் வாடகைக் கட்டடங்களில் துவங்கிடவும் இதன் மூலம் அனுமதி அளிக்கப்படுகின்றன.

(iv) விடுதிகள் ஒவ்வொன்றிலும் 100 மாணவ/மாணவியர் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. புதிதாக துவங்கப்படும் 28 மாணவ/மாணவியர் விடுதிகளுக்கு கீழ்க்கண்டவாறு பணியிடங்கள் தோற்றுவித்து அரசு ஆணையிடுகிறது.

| வ. எண். | பணியிடங்களின் விவரம் | ஊதிய விகிதம் | 28 விடுதிகளுக்கான பணியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | பி.எட். பட்டப்படிப்பு தகுதி பெற்ற காப்பாளர்/ காப்பாளினி | ரூ.9300–34800+ 4400 (தர ஊதியம்) | 28 |
| 2. | சமையலர் | ரூ.4800–10,000+ 1300 (தர ஊதியம்) | (28X2) 56 |
| 3. | காவலர்/ஏவலர் | ரூ.4800–10,000+ 1300 (தர ஊதியம்) | 28 |

ஒவ்வொரு விடுதிக்கும் ஒரு பி.எட். பட்டப்படிப்பு தகுதி பெற்ற காப்பாளர்/காப்பாளினி, இரண்டு சமையலர், ஒரு காவலர்/ஏவலர் பணியிடங்கள் அனுமதிக்கப்படுகின்றன.

4. மேலே பத்தி 2–ல் புதிதாக துவங்கிட அனுமதிக்கப்பட்டுள்ள 28 விடுதிகளுக்கும் ஆண்டொன்றுக்கு தொடர் செலவினமாக ரூ.4,18,49,000/– (ரூபாய் நான்கு கோடியே பதினெட்டு இலட்சத்து நாற்பத்தொன்பதாயிரம் மட்டும்) மற்றும் தொடரா செலவினமாக ரூ.58,52,000/– (ரூபாய் ஐம்பத்தெட்டு இலட்சத்து ஐம்பத்து இரண்டாயிரம் மட்டும்) ஆக மொத்தம் ரூ.4,77,01,000/–க்கு (ரூபாய் நான்கு கோடியே எழுபத்தேழு இலட்சத்து ஆயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினங்கள் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

**(i) <u>பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் (9 கல்லூரி விடுதிகள்)</u> :**

2225 ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 கல்வி – பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் – II - மாநில திட்டம் – JA - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவரில்லங்கள்.

| செலவின விவரம் | தொடர் செலவினம் ரூ. | தொடரா செலவினம் ரூ. |
|---|---|---|
| 01 சம்பளங்கள்<br>(DPC 2225-03-277-JA-0106) | 91,90,000 | -- |
| 05 அலுவலக செலவினங்கள்<br>05 அறை கலன்கள்<br>(DPC 2225-03-277-JA-0553) | -- | 2,70,000 |
| 06 வாடகை கட்டண வீதங்கள் வரிகள்<br>01 வாடகை 6000X9X12<br>(DPC 2225-03-277-JA-0615) | 6,48,000 | -- |
| 24 பொருட்களும் வழங்கலும்<br>(DPC 2225-03-277-JA-2408) | -- | 12,68,000 |
| 34 ஏனைய செலவுகள்,<br>02–நூலகங்கள் முதலியவற்றிற்கு புத்தகங்கள் குறித்த கால வெளியீடுகள் வாங்குதல்<br>(DPC 2225-03-277-JA-3425) | -- | 3,60,000 |
| 67 உணவளிக்கும் உணவு செலவுகள்<br>09 ஏனையவை<br>(DPC 2225-03-277-JA-6799) | 68,85,000 | -- |
| 99 பல்வகை<br>(DPC 2225-03-277-JA-9901) | 3,39,000 | -- |
| | 1,70,62,000 | 18,98,000 |
| **மொத்தம்** | **ரூ.1,89,60,000/–** | |

**(ii) <u>மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் (16 கல்லூரி விடுதிகள்)</u> :**

2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்ட பணிகள் – II - மாநில திட்டம் – KA – மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவரில்லங்கள்.

| செலவின விவரம் | தொடர் செலவினம் ரூ. | தொடரா செலவினம் ரூ. |
|---|---|---|
| 01 சம்பளங்கள்<br>(DPC 2225-03-277-KA-0105) | 1,64,45,000 | -- |
| 05 அலுவலக செலவினங்கள்<br>05 அறை கலன்கள்<br>(DPC 2225-03-277-KA-0552) | -- | 4,80,000 |
| 06 வாடகை கட்டண வீதங்கள் வரிகள்<br>01 வாடகை<br>(DPC 2225-03-277-KA-0614) | 11,52,000 | -- |
| 24 பொருட்களும் வழங்கலும்<br>(DPC 2225-03-277-KA-2407) | -- | 22,54,000 |
| 34 ஏனைய செலவுகள்,<br>02–நூலகங்கள் முதலியவற்றிற்கு புத்தகங்கள் | -- | 6,40,000 |

| | | |
|---|---|---|
| குறித்த கால வெளியீடுகள் வாங்குதல்<br>(DPC 2225-03-277-KA-3424) | | |
| 67 உணவளிக்கும் உணவு செலவுகள்<br>09 ஏனையவை<br>(DPC 2225-03-277-KA-6798) | 12,24,000 | -- |
| 99 பல்வகை<br>(DPC 2225-03-277-KA-9900) | 6,03,000 | -- |
| | 1,94,24,000 | 33,74,000 |
| **மொத்தம்** | **ரூ.2,27,98,000/-** | |

**(iii) <u>சிறுபான்மையினர் நல விடுதிகள் (3 பள்ளி விடுதிகள்)</u> :**

2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்ட பணிகள் – II - மாநில திட்டம் – LA – சிறுபான்மையினர் மாணவரில்லங்கள்.

| செலவின விவரம் | தொடர் செலவினம் ரூ. | தொடரா செலவினம் ரூ. |
|---|---|---|
| 01 சம்பளங்கள்<br>(DPC 2225-03-277-LA-0104) | 30,75,000 | -- |
| 05 அலுவலக செலவினங்கள்<br>05 அறை கலன்கள்<br>(DPC 2225-03-277-LA-0551) | -- | 90,000 |
| 06 வாடகை கட்டண வீதங்கள் வரிகள்<br>01 வாடகை<br>(DPC 2225-03-277-LA-0613) | 2,16,000 | -- |
| 24 பொருட்களும் வழங்கலும்<br>(DPC 2225-03-277-LA-2406) | -- | 3,48,000 |
| 34 ஏனைய செலவுகள்,<br>02–நூலகங்கள் முதலியவற்றிற்கு புத்தகங்கள் குறித்த கால வெளியீடுகள் வாங்குதல்<br>(DPC 2225-03-277-LA-3423) | -- | 90,000 |
| 67 உணவளிக்கும் உணவு செலவுகள்<br>09 ஏனையவை<br>(DPC 2225-03-277-LA-6797) | 19,89,000 | -- |
| 68 புத்தகங்கள் நோட்டு புத்தகங்கள் சிலேட்டுகள் முதலியவற்றிற்கு ஆகும் செலவு<br>(DPC 2225-03-277-LA-6804) | -- | 52,000 |
| 99 பல்வகை<br>(DPC 2225-03-277-LA-9909) | 83,000 | -- |
| | 53,63,000 | 5,80,000 |
| **மொத்தம்** | **ரூ.59,43,000/-** | |

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான செலவினத்தை மேற்கொள்ள பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினா் நல ஆணையர் மற்றும் சிறுபான்மையினர் நல ஆணையர் ஆகியோருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7. தொடரா செலவினத்தில் ஒவ்வொரு பள்ளி மற்றும் கல்லூரி விடுதிக்கு கீழ்க்கண்டுள்ள இனங்களுக்கான செலவினம் அனுமதிக்கப்படுகின்றது.

| வ. எண். | செலவினம் | அனுமதிக்கப்படும் தொகை ரூ. |
|---|---|---|
| (i) | எரிவாயு இணைப்பு | 30,000 |
| (ii) | நூலக வசதி | 30,000 |
| (iii) | பாத்திரங்கள் | 30,000 |
| (iv) | மரச்சாமான்கள் | 30,000 |
| (v) | அரவை இயந்திரம் | 8,000 |
| (vi) | குடிநீர் சுத்திகரிக்கும் கருவி | 11,000 |
| (vii) | விளையாட்டு கருவிகள் | 5,000 |
| (viii) | முதலுதவி பெட்டி | 650 |
| (ix) | வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி | 4,000 |
| (x) | பூச்சி அழிப்பான் மின்கருவி | 5,100 |
| (xi) | பாய் (100 எண்ணிக்கை x ரூ.48) | 4,800 |
| (xii) | பெட்ஷீட் (100 எண்ணிக்கை x ரூ.100) | 10,000 |
| (xiii) | தட்டு மற்றும் டம்ளர் (100 எண்ணிக்கை x ரூ.75) | 7,500 |
| (xiv) | அகராதி மற்றும் அட்லஸ் (100 எண்ணிக்கை x ரூ.175) (பள்ளி விடுதிகளுக்கு மட்டும்) | 17,500 |

8. மேலே பத்தி 6–ல் கல்லூரி விடுதி மற்றும் பள்ளி விடுதிகளுக்கு அனுமதிக்கப்பட்ட இனங்கள் தவிர ஒவ்வொரு கல்லூரி விடுதிக்கும் கீழ்க்கண்டவாறு கூடுதல் இனங்களுக்கும் செலவினம் அனுமதிக்கப்படுகின்றது.

(i) இன்வர்ட்டர் ரூ. 15,000/–

(ii) பாடக்குறிப்புப் புத்தகம் ரூ. 10,000/–

(iii) புத்தக அலமாரி ரூ. 9,800/–

9. இது ஒரு "புது துணைப்பணி" குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறும்பொருட்டு, இச்செலவினம் 2011–2012–ஆம் ஆண்டு இறுதி துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்படும்.

10. இணைப்பில் கண்டுள்ள 28 புதிய விடுதிகளும் முறையாக துவக்கப்பட்ட பின்னர் உரிய அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், சிறுபான்மையினர் நல ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

11. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவினை அதன் அ. சா. எண்.15682/மை.ம.ஆபி./2012, நாள். 16.3.2012–ல் பெற்று வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

கோ.சந்தானம்,
அரசு செயலாளர்

பெறுநர்:
இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் நலம், சென்னை – 5.
ஆணையர், சிறுபான்மையினர் நலம், சென்னை–2.
ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம், சென்னை-5.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
மாநில கணக்காயர், சென்னை–18 /(பெயரில்)
மாநில கணக்காயர் (தணிக்கை – 1), சென்னை18/(பெயரில்)
மாநில கணக்காயர் (தணிக்கை–2), சென்னை – 18/(பெயரில்)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை – 5/மதுரை.
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள்
சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்

<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை– 9.
பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை– 9.
நிதித் (பி.மிபி/வ.செ.பொ.I/வ.செ.பொ.II/CMPC) துறை, சென்னை– 9.
பி. மி.பி. (ம) சி.ந. (பிந3 /சிநஆபி) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/ உபரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு

**அரசாணை (நிலை) எண். 28, பி. மி.பி. (ம) சி.நலத்துறை, நாள். 16.3.2012–ன்படி 2011–2012–ஆம் ஆண்டில் புதிதாக திறக்கப்பட வேண்டிய விடுதிகளின் விவரம்**

| வ.எண். | விடுதிகளின் விவரம் |
|---|---|
| பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் | |
| 1. | பிற்படுத்தப்பட்ட வகுப்பு கல்லூரி மாணவர் விடுதி, சென்னை. |
| 2. | பிற்படுத்தப்பட்ட வகுப்பு கல்லூரி மாணவர் விடுதி, தாம்பரம், காஞ்சிபுரம் மாவட்டம். |
| 3. | பிற்படுத்தப்பட்ட வகுப்பு தொழிற்பயிற்சி மாணவர் விடுதி, கவுண்டம்பாளையம், கோயம்பத்தூர். |
| 4. | பிற்படுத்தப்பட்ட வகுப்பு கல்லூரி மாணவியர் விடுதி, உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம். |
| 5. | பிற்படுத்தப்பட்ட வகுப்பு தொழிற்பயிற்சி மாணவர் விடுதி, தஞ்சாவூர். |
| 6. | பிற்படுத்தப்பட்ட வகுப்பு கல்லூரி மாணவர் விடுதி, ஆண்டிப்பட்டி, தேனி மாவட்டம். |
| 7. | பிற்படுத்தப்பட்ட வகுப்பு கல்லூரி மாணவியர் விடுதி, நிலக்கோட்டை, திண்டுக்கல் மாவட்டம். |
| 8. | பிற்படுத்தப்பட்ட வகுப்பு கல்லூரி மாணவர் விடுதி, சிவகங்கை மாவட்டம். |
| 9. | பிற்படுத்தப்பட்ட வகுப்பு கல்லூரி மாணவர் விடுதி, அகஸ்தீஸ்வரம், கன்னியாகுமரி மாவட்டம். |
| மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் | |
| 10. | மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு கல்லூரி மாணவியர் விடுதி, சென்னை. |
| 11. | மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு கல்லூரி மாணவியர் விடுதி, சென்னை. |
| 12. | மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு பாலிடெக்னிக் கல்லூரி மாணவர் விடுதி, காரப்பேட்டை, காஞ்சிபுரம் மாவட்டம். |
| 13. | மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு கல்லூரி மாணவியர் விடுதி, கெஜல்நாயக்கன்பட்டி, திருப்பத்தூர், வேலூர் மாவட்டம். |
| 14. | மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு கல்லூரி மாணவியர் விடுதி, செய்யார், திருவண்ணாமலை மாவட்டம். |
| 15. | மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு கல்லூரி மாணவியர் விடுதி, கடலூர், கடலூர் மாவட்டம். |
| 16. | மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு கல்லூரி மாணவர் விடுதி, கள்ளக்குறிச்சி, விழுப்புரம் மாவட்டம். |
| 17. | மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு பாலிடெக்னிக் மாணவர் விடுதி, கெரகோடஅள்ளி, தர்மபுரி மாவட்டம். |
| 18. | மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு கல்லூரி மாணவியர் விடுதி, பர்கூர், கிருஷ்ணகிரி மாவட்டம். |
| 19. | மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு கல்லூரி மாணவியர் விடுதி, சேலம், சேலம் மாவட்டம். |
| 20. | மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு கல்லூரி மாணவியர் விடுதி, ராசிபுரம், நாமக்கல் மாவட்டம். |
| 21. | மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு கல்லூரி மாணவியர் விடுதி, முசிறி, திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| 22. | மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு கல்லூரி மாணவியர் விடுதி, அரியலூர், அரியலூர் மாவட்டம். |
| 23. | மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு கல்லூரி மாணவியர் விடுதி, குறும்பலூர், பெரம்பலூர் மாவட்டம். |
| 24. | மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு கல்லூரி மாணவியர் விடுதி, தான்தோன்றிமலை, கரூர் மாவட்டம். |
| 25. | மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு கல்லூரி மாணவியர் விடுதி, திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மாவட்டம். |
| சிறுபான்மையினர் நல விடுதிகள் | |
| 26. | இஸ்லாமிய பள்ளி மாணவியர் விடுதி, மதுரை கிழக்கு, மதுரை. |
| 27. | இஸ்லாமிய பள்ளி மாணவியர் விடுதி, மேல்விஷாரம், வேலூர் மாவட்டம். |
| 28. | இஸ்லாமிய பள்ளி மாணவியர் விடுதி, தேன்கனிக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம். |

கோ.சந்தானம்,
அரசு செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்
20/3/2012